விருதுநகர் மாவட்டம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு
அறிவிக்கை (Notification)
ஒன்றியத் தலைப்பு அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு
நேரடி நியமனம்

ந.க.எண்:அ8/4090/2023 நாள்: 06.10.2023

விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பில் காலியாக உள்ள மூன்று (3) அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பத்தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

காலிப்பணியிடங்களின் விபரம்

| வ. எண் | பதவி | காலியிடம் | இன சுழற்சி விபரம் |
|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | 3 | பொதுப்போட்டி - 1 (முன்னுரிமை பெற்றவர்) |
| 2 | | | ஆதிதிராவிடர் - 1 (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) (பெண்) (ஆதரவற்ற விதவை) |
| 3 | | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 1 மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமை பெற்றவர்) |

ஊதியம்: ரூ.15,700/-(15700-50000)

கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள்:

- 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
- மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்

வயது வரம்பு:

- 01.07.2023 அன்று

| வ. எண். | பிரிவு | குறைந்த பட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு | ஆதரவற்ற விதவை |
|---|---|---|---|---|
| 1. | பொதுப்பிரிவு | 18 | 32 | 37 |
| 2. | பிற்படுத்தப்பட்டோர் | 18 | 34 | |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 18 | 34 | |
| 4. | ஆதிதிராவிடர்/பழங்குடியினர் | 18 | 37 | |

வயது வரம்புச் சலுகை:

(i) நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள்(ஏனையோர்) :

நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச் சலுகை பெறத் தகுதியுடையவராவர்கள் (தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 64-ல் குறிப்பிட்டுள்ளவாறு)

(ii) முன்னாள் இராணுவத்தினருக்கு(ஏனையோர்) :

அ) ஆதி., ஆதி(அ), ப.ப., மி.பி.வ., /சீ.ம., பி.வ.(இஅ) மற்றும் பி.வ(இ) தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு 55 வயது வரை சலுகை வழங்கப்படும்.

ஆ) மேலே (அ) வில் கூறப்பட்ட எந்த வகையிலும் சேராத "ஏனையோர்" விண்ணப்பத்தாரர்களின் அதிகபட்ச வயது வரம்பு 50 வயது ஆகும். (தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 63 மற்றும் அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 13.09.2021-இல் குறிப்பிட்டுள்ளவாறு)

இ) ஏற்கனவே ஏதேனும் ஒருபிரிவு/ பணி / பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் இராணுவ விண்ணப்பதாரர், முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையை மீண்டும் பெற முடியாது (தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 3(j)-.ல் குறிப்பிட்டுள்ளவாறு)

## விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்:

- அனைத்து சான்று நகல்களிலும் சுய சான்றொப்பமிடப்பட்டு இணைத்து அனுப்பப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கப்படக்கூடாது.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 11.10.2023 முதல் 31.10.2023 பிற்பகல் 05.45 மணிக்குள் **"ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், இராஜபாளையம்"** என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். காலதாமதமாக வரப்பெற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தகுதியற்ற (கல்வி, வயது, இனசுழற்சி) விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.
- முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன் அஞ்சல் உறையில் அனுப்பப்பட வேண்டும். மேலும், ரூ.25/- மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய சுயவிலாசமிட்ட ஒப்புகை அட்டையுடனும், அஞ்சல் உறையுடனும் இணைத்து அனுப்ப வேண்டும்.
- நேர்காணலுக்கு வரும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
- அரசு விதிகளின்படி இனசுழற்சி முறை பின்பற்றி நிபந்தனைகள் மேற்கொள்ளப்படும்.
- அரசாணை (நிலை)எண்:122 மனிதவள மேலாண்மைத் (கே.2)துறை நாள்:02.11.2021-இன்படி முன்னுரிமைக்கான சான்று இணைத்து வரப்பெறாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு அரசாணை எண்.303, நிதி(ஊதியக்குழு) துறை நாள்.11.10.2017, அரசாணை எண். 305, நிதி(ஊதியக்குழு) துறை நாள்.13.10.2017 மற்றும் 306, நிதி(ஊதியக்குழு) துறை நாள்.13.10.2017-இன்படி ஊதியம் மற்றும் அனுதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம்(Call Letter) அனுப்பி வைக்கப்படும்.

அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவம் தேசிய தகவலியல் மையம் (National Informatics Center) virudhunagar.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணையாளர்,
இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம்,
விருதுநகர் மாவட்டம்.

06/10/23

# இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம்
## அலுவலக உதவியாளர் பணிக்கான விண்ணப்பம்

புகைப்படம்
கையொப்பத்துடன்

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர்<br>(தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) | : | |
| 2. | தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் | : | |
| 3. | பாலினம் (ஆண்/ பெண்/ திருநங்கை) | : | |
| 4. | பிறந்த தேதி / (01.07.2023 அன்று வயது)<br>(சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 5. | நிலையான முகவரி அஞ்சல் எண்ணுடன்<br>(சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 6. | கைபேசி எண். | : | |
| 7. | ஆதார் அட்டை எண்.<br>(அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 8. | கல்வி தகுதி<br>(சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 9. | சாதி / உட்பிரிவு (OC/BC/MBC/DNC/SC/ST)<br>(சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 10. | வேலைவாய்ப்பு பதிவு அட்டை விபரம்<br>(அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 11. | முன்னுரிமை விபரம்<br>(அரசாணை (நிலை) எண்:122 மனிதவள மேலாண்மைத் (கே.2)துறை நாள்:02.11.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு)<br>(சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |

நாள் :

இடம்:

விண்ணப்பதாரரின் கையொப்பம்